# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


அசல் மனு எண்:0994/2016/ந

ஆ.எண்: 0168/2016

நாள்: 03.11.2016

திரு. G. ரங்கசாமி,
செயலாளர், ராதா நகர் RRL,
குடியிருப்போர் நலச்சங்கம்
குரோம்பேட்டை. – மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி. – எதிர் மனுதாரர்

## ஆணை:

மனுதாரரது 20.09.2016 நாளிட்ட முறையீட்டு மனு 23.09.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண்: 0994/16 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி மனுவில் பல்லவபுரம் நகராட்சிப் பகுதியில் முறையான குடிநீர் விநியோகம் மற்றும் சாலைப் பணிகள் நடைபெறாமல் உள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி முறையீட்டு மனு குறித்து தக்க துரித நடவடிக்கைகள் மேற்கொண்டு மனுதாரருக்கு உரிய பதிலளித்திடவும், அறிக்கையினை இம்முறை மன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்திடவும் அறிவுறுத்தி பல்லவபுரம் நகராட்சி ஆணையருக்கு அறிவிப்பாணை (மனு எண்: 0994/16/ந, நாள் 27.09.2016) அனுப்பி ஆணையிடப்பட்டது.

மேலும், 21.10.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மனுதாரரது முறையீடு குறித்தான அறிக்கையினை உடன் அனுப்பி வைத்திடவும் நடவடிக்கை விவரங்கள் அடங்கிய தக்க பதிலினை மனுதாரருக்கு அனுப்பி வைத்து இம்முறை மன்ற நடுவத்திற்கு நகலிடவும் வலியுறுத்தப்பட்டது.

பல்லவபுரம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.1800/16/இ3, நாள்: 20.10.2016ல் மனுதாரர்களது கோரிக்கை வாரியான நடவடிக்கைகள் மற்றும் நிலை குறித்தான விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், மேற்படி அறிக்கையின் நகல் மனுதாரர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு சீரான குடிநீர் விநியோகம் மற்றும் சாலைப் பணிகளை துரிதப்படுத்தி உரிய காலத்திற்குள் முடிக்கப்படுவதை உறுதி செய்து கொள்ளுமாறு வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2016-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3-ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

10/11/2016

செயலாளர்.

4.11.16 4/11/16

பெறுநர்

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி,
குரோம்பேட்டை,
சென்னை.

திரு. G. ரங்கசாமி,
செயலாளர், ராதா நகர் RRL,
குடியிருப்போர் நலச்சங்கம்
குரோம்பேட்டை.